## கூட்டுறவுச் சங்கங்களுக்கான இரண்டாம் நிலைத் தேர்தல்

## மே' 28—ல் வேட்பு மனுத் தாக்கல்

## ஜூன் 5—ல் வாக்குப்பதிவு

## மாநிலத் தேர்தல் ஆணையர் அறிவிப்பு

தமிழகத்தில் கூட்டுறவுச் சங்கங்களுக்கான இரண்டாம் நிலைத் தேர்தலுக்கான வேட்பு மனுத்தாக்கல் மே'28 அன்று நடைபெறும் என்றும் வாக்குப்பதிவு ஜூன் 5—ஆம் தேதியன்று நடைபெறும் என்றும் கூட்டுறவுச் சங்கங்களுக்கான மாநிலத் தேர்தல் ஆணையர் திரு.ம.ரா.மோகன், இ.ஆ.ப., (ஓய்வு) தெரிவித்துள்ளார். இது சம்பந்தமாக அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு வருமாறு :

### இரண்டாம் நிலைத் தேர்தல்

தமிழகத்தில் முதல் நிலையில் 22,212 கூட்டுறவுச் சங்கங்களுக்கு நான்கு கட்டங்களாக தேர்தல் நடைபெற்று முடிவடைந்துள்ளது. இச்சங்கங்களில் தலைவர் / துணைத்தலைவர் தேர்தலும் முடிவுற்று தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் / துணைத்தலைவர்கள் மே'9 அன்று பதவி ஏற்கின்றனர். இதனைத் தொடர்ந்து இரண்டாம் நிலையில் 198 கூட்டுறவுச் சங்கங்களுக்கு தேர்தல் நடைபெறவுள்ளது.

### தேர்தல் நடைபெறவுள்ள சங்கங்கள்

இரண்டாம் நிலையில், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் கட்டுப்பாட்டில் உள்ள 113 வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், பால் வளத்துறை ஆணையரின் கட்டுப்பாட்டில் உள்ள 17 மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்கள், மீன் வளத்துறை இயக்குநரின் கட்டுப்பாட்டில் உள்ள 12 மாவட்ட மீனவர் கூட்டுறவு இணையங்கள், கைத்தறித் துறை இயக்குநரின் கட்டுப்பாட்டின் கீழ் வரும் 14 மாவட்ட கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் இணையங்கள் மற்றும் 6 கூட்டுறவு நூற்பாலைகள், தமிழ்நாடு பனைவெல்ல வளர்ச்சி வாரியத்தின் கீழ் செயல்படும் 8 மாவட்ட பனைவெல்ல கூட்டுறவு இணையங்கள், தொழில் ஆணையர் மற்றும் தொழில்வணிகத்துறை இயக்குநரின் கீழ் வரும் 5 மாவட்ட சிறு தீப்பெட்டி தயாரிப்போர் சேவை தொழில் கூட்டுறவு சங்கங்கள் 3 மாவட்ட கயிறு விற்பனை தொழில் கூட்டுறவுச் சங்கங்கள், 2 தேயிலை உற்பத்தியாளர் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள், சர்க்கரைத் துறை இயக்குநரின் கீழ் செயல்படும் 16 கூட்டுறவு சர்க்கரை ஆலைகள், சமூக நலத்துறை இயக்குநரின் கீழ் செயல்படும் 1 பெண்கள் தையல் கூட்டுறவு சங்கம், கதர் கிராமத் தொழில்கள் வாரியத்தின் கீழ் செயல்படும் 1 மாவட்ட எண்ணெய் உற்பத்தியாளர்கள் மற்றும் கைக்குத்தல் அரிசி தயாரிப்போர் தொழில் கூட்டுறவு இணையம் ஆகிய 198 கூட்டுறவுச் சங்கங்களுக்கு இரண்டாம் நிலையில் தேர்தல் நடைபெறவுள்ளது.

## தேர்தல் திட்டம்

மேற்குறிப்பிட்ட 198 கூட்டுறவுச் சங்கங்களுக்கான வாக்காளர் பட்டியல் மே’21 அன்று வெளியிடப்படுகிறது. இந்த வாக்காளர் பட்டியலுக்கான மறுப்பு ஏதும் இருப்பின் அதனை மே’23–க்குள் தெரிவிக்கலாம். இறுதி வாக்காளர் பட்டியல் மே’25 அன்று வெளியிடப்படும்.

## வேட்பு மனு தாக்கல்

வேட்பு மனுத்தாக்கல் மே’28 காலை 10 மணி முதல் மாலை 4.00 மணி வரை நடைபெறும். அன்றே வேட்பு மனுக்கள் பரிசீலனை செய்யப்பட்டு அன்று மாலை 6.00 மணிக்கு தகுதியான வேட்பாளர் பட்டியல் வெளியிடப்படும். வேட்பு மனுவை திரும்பப் பெற விரும்புவோர் மறு நாள் மே’29 அன்று காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை திரும்ப பெற்றுக் கொள்ளலாம். அன்று மாலை 5.00 மணிக்கு போட்டியிடும் வேட்பாளர்களின் இறுதிப்பட்டியல் வெளியிடப்படும்.

## வாக்குப்பதிவும், வாக்கு எண்ணிக்கையும்

போட்டியுள்ள கூட்டுறவுச் சங்கங்களில் ஜுன்’5 காலை 8.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை வாக்குப்பதிவு நடைபெறும். மறு நாள் ஜுன்’6 காலை 10.00 மணிக்கு வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படும்.

## தலைவர் / துணைத்தலைவர் தேர்தல்

இரண்டாம் நிலையில் தேர்தல் நடைபெறும் 198 கூட்டுறவுச் சங்கங்களில் தலைவர் / துணைத்தலைவரை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் ஜுன்’10 அன்று காலை 10.00 மணிக்கு நடைபெறும்.

## இட ஒதுக்கீடு

ஏற்கெனவே முதல்நிலைத் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்டது போலவே இந்த இரண்டாவது நிலைத் தேர்தலிலும் தேர்ந்தெடுக்கப்படும் நிர்வாகக் குழு இயக்குநர் இடங்களில் 18% ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கும், 30% பெண்களுக்கும் இட ஒதுக்கீடு செய்யப்படும். இதர இடங்கள் பொதுப்பிரிவினரிலிருந்து தேர்ந்தெடுக்கப்படும்.

## மூன்றாவது நிலைத் தேர்தல்

இரண்டாவது கட்டத் தேர்தல் முடிவடைந்ததும் மூன்றாவது கட்டத்தேர்தலுக்கான திட்டமும், தேர்தல் அட்டவணையும் வெளியிடப்படும்.

மேற்கண்டவாறு கூட்டுறவுச் சங்கங்களுக்கான மாநிலத் தேர்தல் ஆணையர் திரு.ம.ரா.மோகன், இ.ஆ.ப., (ஓய்வு) தனது செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

**ஆணையர்.**

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை.9**